# ஒரு தீர்க்கதரிசியாக தாவீது

*தாவீதின் வாழ்வைப் பற்றிய ஒரு படிப்பானது, ஒரு தீர்க்கதரிசி என்ற வகையில் அவரது பணிப்பொறுப்பைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்காமல் நிறைவடைவதில்லை.*

*சங்கீதங்களின் புத்தகம் பற்றிப் பொதுவாக நாம், அடிப்படையில் தியானத்தின் இயல்பு கொண்டுள்ளதாக நினைக்கின்றோம், இருப்பினும் அந்தப் புத்தகத்தினூடே பலமான தீர்க்கதரிசனப் பெருமுயற்சி ஒன்று ஓடுகின்றது. இயேசு தாம் உயிர்த்தெழுந்த பிறகு தமது சீஷர்களுக்குத் தரிசனமான பொழுது, அவர் "நியாயப்பிரமாணத்திலும் தீர்க்கதரிசிகளின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவை களெல்லாம் நிறைவேற வேண்டியிருக்கிறது" (லூக். 24:44) என்று கூறினார். புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள், பழைய ஏற்பாட்டின் வேறு புத்தகத்தைக் காட்டிலும் சங்கீதப் புத்தகத்திலிருந்து அதிகமான மேற்கோள்களை எடுத்துக்காட்டினார்கள். அவர்கள் மேற்கோள் காண்பித்துள்ள சங்கீதங் களில் பெரும்பான்மையானவை தாவீதினால் எழுதப்பட்டவைகளாக உள்ளன.*

*தாவீது சாமுவேலினால் அபிஷேகம் செய்விக்கப்பட்டபோது, "அந்நாள்முதற்கொண்டு கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின்மேல் வந்து இறங்கியிருந்தார்" (1 சாமு. 16:13). தேவனுடைய ஆவியானவர் தாவீதுக்குக் கொடுத்த விஷயங்களில் ஒன்று, தேவாலயத்திற்கான வரைபடத் திட்ட மாகும் (1 நாளா. 28:19). தாவீது சங்கீதங்களை எழுதியபோது அவர் ஆவியானவரால் ஏவப்பட்டிருந்தார் என்பது நமக்கு ஆர்வமிக்க உண்மையாக உள்ளது. "தாவீதின் கடைசி வார்த்தைகள்" பின்வருமாறு தொடங்குகின்றன:*

> *மேன்மையாய் உயர்த்தப்பட்டு,*
> *யாக்கோபுடைய தேவனால் அபிஷேகம் பெற்று,*
> *இஸ்ரவேலின் சங்கீதங்களை இன்பமாய்ப் பாடின*
> *ஈசாயின் குமாரனாகிய தாவீது என்னும் புருஷன் சொல்லுகிறது*
> *என்னவென்றால்,*
> *கர்த்தருடைய ஆவியானவர் என்னைக் கொண்டு பேசினார்;*
> *அவருடைய வசனம் என்னுடைய நாவில் இருந்தது (2 சாமு. 23:1, 2).*

*தாவீது அநேகமாக, தமது கூற்றின் எல்லா மறைபொருள்களையும் முழுமையாகப் புரிந்து கொண்டிருக்க மாட்டார். தாவீதின் சங்கீதங்கள்,*

அவர் தாம் இருக்கக் கண்ட வாழ்வின் சூழ்நிலைகளிலிருந்தும், அவைகள் அவருக்குள் உண்டாக்கிய உணர்வு எழுச்சிகளில் இருந்தும் எழும்பி வந்தன. அவர் தாம், வர இருந்த மேசியாவின் மாதிரியாக இருந்தார் என்பது பற்றியோ அல்லது தமது கூற்றுக்களில் கிறிஸ்துவின் வாழ்வில் முழுமையான நிறைவேற்றம் அடையப் போகிறவைகள் எத்தனை என்பது பற்றியோ முழு அளவுக்கு உணர்ந்து அறிந்திருக்க மாட்டார்.

புதிய ஏற்பாட்டின் பல வசனப்பகுதிகள், தாவீதை தேவனுக்காகப் பேசியவர் என்று குறிப்பிடுகின்றன. யூதாஸுக்குப் பதிலாக ஒருவரை நியமிக்க வேண்டிய வேளை வந்தபொழுது, பேதுரு "சகோதரரே, இயேசுவைப் பிடித்தவர்களுக்கு வழிகாட்டின யூதாசைக் குறித்துப் பரிசுத்த ஆவி தாவீதின் வாக்கினால் முன்சொன்ன வேதவாக்கியம் நிறைவேற வேண்டியதாயிருந்தது" (அப். 1:16) என்று கூறி, சங்கீதம் 69 மற்றும் 109ல் இருந்து மேற்கோள் காண்பித்தார். பேதுரு தமது முதல் சுவிசேஷப் பிரசங்கத்தைப் பிரசங்கித்தபோது, அவர் சங்கீதம் 16ல் இருந்து மேற்கோள் காண்பித்து, "அவன் [தாவீது] தீர்க்கதரிசியாயிருந்து: உன் சிங்காசனத்தில் வீற்றிருக்க மாம்சத்தின்படி உன் சந்ததியிலே கிறிஸ்துவை எழும்பப்பண்ணு வேன் என்று தேவன் தனக்குச் சத்தியம் பண்ணினதை அறிந்தபடியால், அவன் கிறிஸ்துவினுடைய ... உயிர்த்தெழுதலைக் குறித்து இப்படிச் சொன்னான்" என்று கூறினார் (அப். 2:30, 31). அப். 4ல், அப்போஸ்தலர்கள் தேவனிடத்தில் ஜெபித்தபோது, அவர்கள் சங்கீதம் 2லிருந்து மேற்கோள் காண்பித்து, "கர்த்தருக்கு விரோதமாகவும் அவருடைய கிறிஸ்துவுக்கு விரோதமாகவும் பூமியின் ராஜாக்கள் எழும்பி நின்று, அதிகாரிகள் ஏகமாய்க் கூட்டங்கூடினார்கள் என்றும் உம்முடைய தாசனாகிய தாவீதின் வாக்கினால் உரைத்தீரே" என்று குறிப்பிட்டார்கள் (வ. 25). எபிரெயருக்கு நிருபம் எழுதியவர், தமது வாசகர்களை உடனே பதிற்செயல் செய்யும்படி உற்சாகப்படுத்துவதற்கு விரும்பியபோது, அவர் சங்கீதம் 95ல் இருந்து மேற்கோள் காண்பித்து, "இன்று அவருடைய சத்தத்தைக் கேட்பீர்களாகில் உங்கள் இருதயங்களைக் கடினப்படுத்தாதிருங்கள் என்று ... தாவீதின் சங்கீதத்தில் சொல்லியிருக்கிறபடி, இன்று என்று சொல்வதினாலே பின்னும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார்" (எபி. 4:7) என்று கூறினார்.

இங்கு புதிய ஏற்பாட்டில் மேற்கோள் காண்பிக்கப்பட்ட சங்கீதங்கள் சில (அடைப்புக் குறிகளுக்குள் அவற்றின் புதிய ஏற்பாட்டு வசனக் குறிப்புடன்) தரப்படுகின்றன: 2:1 (அப். 4:25, 26); 2:7 (அப். 13:33); 2:9 (வெளி. 2:27; 12:5; 19:15); 5:9 (ரோமர் 3:13); 10:7 (ரோமர் 3:14); 14:1-3 (ரோமர் 3:10-12); 18:49 (ரோமர் 15:9); 19:4 (ரோமர் 10:18); 22:1 (மத். 27:46); 22:18 (மத். 27:35; லூக். 23:34; யோவா. 19:24); 32:1, 2 (ரோமர் 4:7, 8); 34:20 (யோவா. 19:36); 41:9 (யோவா. 13:18); 69:9 (யோவா. 2:17); 69:21 (மத். 27:34); 110:1 (மத். 22:44; மாற். 12:36; லூக். 20:42, 43; அப். 2:34, 35); 118:22 (மத். 21:42; மாற். 12:10; லூக். 20:17; அப். 4:11; எபே. 2:20; 1 பேது. 2:7); 118:26 (மத். 21:9; 23:39; மாற். 11:9; லூக். 13:35; 19:38; யோவா. 12:13). இந்தச் சங்கீதங்களில் பெரும்பான்மையானவைகள் தாவீதினால் எழுதப் பட்டவை என்று திட்டவட்டமாகக் குறிப்பிடுபவைகள் ஆகும்;

இவைகளில் எதுவும் வேறு எந்த எழுத்தாளராலும் எழுதப்பட்டவை என்று குறிப்பிடப்படுபவைகளாய் இருப்பதில்லை.

மேலே கொடுக்கப்பட்ட புதிய ஏற்பாட்டு வசனப்பகுதிகளில், சங்கீதங்கள் பல்வேறு வழிமுறைகளில் பயன்படுத்தப்படுகின்றன. சிலவற்றில், புதிய ஏற்பாட்டுக் குறிப்பானது சங்கீதங்களின் வசனப் பகுதிகளின் நேரடியான நிறைவேற்றத்தைக் கூறுகின்றது. சிலவற்றில், புதிய ஏற்பாட்டு நிகழ்வுகளில் நடைபெற்றது எதுவோ, அது சங்கீதங்களின் சூழ்நிலைக்கு இணையானதாக உள்ளது. இன்னும் சிலவற்றில், சங்கீதங் களின் மொழிநடையானது அதன் ஏற்புடையதன்மையின் காரணமாக (அப்படியே) பயன்படுத்தப்படுகின்றது.

தாவீதின் மூலமாகத் தேவன் எவ்வாறு கிரியை செய்தார் என்று நீங்கள் ஆழ்ந்து சிந்திக்கும் பொழுது பின்வரும் வலிவார்ந்த பணிநிலையை மறந்து விடாதீர்கள்: அவர் ஒரு *தீர்க்கதரிசியாய்* இருந்தார்!

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியானது, கிறிஸ்தவர்களின் உதாரத்துவத்தின் மூலமாக வேதாகமப் பாடங்களை இலவசமாக வழங்க முடிகிறது. இன்று வரையிலான முகவரிப் பட்டியலை நாங்கள் வைத்துக் கொள்வதற்காக, கீழே கொடுக்கப்பட்டிருக்கும் விபரங்களை நீங்கள் கொடுக்குமாறு உங்களைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

வருடத்திற்கு ஒருமுறையாவது தயவுசெய்து எங்களுக்கு எழுதி, உங்களுடைய விபரம் இன்னும் சரியாயிருக்கிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவும், நீங்கள் படிப்பதற்கு இந்த வேத பாடங்களை உதவியாகக் காண்கிறீர்களா என்பதையும் தெரியப்படுத்துங்கள். கர்த்தருக்கான உங்கள் ஊழியத்தில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

ஒன்றைக் குறிப்பிடவும்: ❐ ஆண் ❐ பெண்

பெயர்: ______________________________

முழு முகவரி: (முகவரியை பெரிய ஆங்கில எழுத்தில் எழுதவும்.)

______________________________

______________________________

______________________________

______________________________

புதிய முகவரி பழைய முகவரி (முகவரியில் மாற்றம் இருக்குமானால்) தெரியப்படுத்தவும்:

______________________________

______________________________

______________________________

______________________________

Email விலாசம்: ______________________________

எந்த சபையில் நீங்கள் கலந்துகொள்கிறீர்கள்? ______________________________

அது எங்கிருக்கிறது? ______________________________

பிரசங்கிப்பவரின் பெயர்: ______________________________

நீங்கள் கலந்துகொள்ளும் உள்ளூர் சபையில் உங்கள் பொறுப்பு என்ன? (சம்பந்தப்பட்ட எல்லாவற்றையும் குறிப்பிடவும்.)

❐ பிரசங்கிப்பவர் ❐ அங்கத்தினர்

❐ வேதபாட வகுப்பு ஆசிரியர் ❐ அங்கத்தினரல்லாதவர்.

இன்றைக்கான சத்தியம் உலக ஊழியப் பள்ளியின் வெளியீடு களை தற்போது நீங்கள் தவறாமல் பெற்றுக் கொண்டு வருகிறீர்களா? (ஒன்றைக் குறிப்பிடவும்):

❐ இல்லை.

❐ ஆம், நேரடியாக எனக்கு அனுப்பப்படுகின்றன.

❐ ஆம், விநியோகிக்கப்பவரின் பெயர் ____________________.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

*எந்த மொழியில் வெளியீடுகளைப் பெற நீங்கள் விரும்புகிறீர்கள்? (ஒன்றை மாத்திரம் குறிப்பிடவும்.)*

❒ *ஆங்கிலம்* ❒ *தமிழ்* ❒ *ஹிந்தி* ❒ *தெலுங்கு*

*நீங்கள் பெற்றுக் கொள்ளும் வெளியீடுகளை எவ்விதம் உபயோகிக்கிறீர்கள்/உபயோகிப்பீர்கள்?*

____________________________________________

____________________________________________

*இப்பாடங்களை தொடர்ச்சியாக பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாராவது உங்களுக்குத் தெரியுமானால், தயவு செய்து அவர்களுக்காக இன்னுமொரு படிவத்தைப் பூர்த்தி செய்து, கீழ்க்கண்ட முகவரிக்கு அனு ப்புங்கள்.*

Truth for Today
P.O. Box: 5311
Shivajinagar, Bangalore - 560 001